# முகவுரை

வேதம் ஓர் அறிவுக்களஞ்சியம் (**A body of knowledge**). ரிஷிகள் மூலமாக இறைவனாலேயே வெளிப்படுத்தப்பட்டதே வேதம் என்று, மரபில் வந்தோர் வேதத்தை நோக்குகின்றனர். நாம் வாழ்வில் எவற்றையெல்லாம் அடையலாம் என்ற நம் லக்ஷ்யங் களைப் பற்றிய அறிவைக் கொடுத்தும் அந்த லக்ஷ்யங்களை அடைவதற்கான பாதைகளின் அறிவைக் கொடுத்தும் நம் வாழ்வை வேதமானது பயனுடையதாக்குகிறது.

நமது அனைத்து லக்ஷ்யங்களும் நான்காகப் பிரிக்கப்படுகின்றன.

1. அர்த்தம் - **अर्थः**
2. காமம் - **कामः**
3. தர்மம் - **धर्मः**
4. மோக்ஷம் - **मोक्षः**

அர்த்தம் என்பது நம்முடைய பாதுகாப்பிற்காகப் பயன்படும் பொருள்கள். உடலும் மனமும் வருந்தாது இருக்க நாம் சேர்க்கும் உடைமைகள் அர்த்தம் எனப்படும். மனிதன் மனதில் உதிக்கும் முதல் லக்ஷ்யம் இதுவே. உடலும் மனமும் வருந்தாது பாதுகாக்க அர்த்தம் பயன்படுகிறது.

காமம் என்பது இன்பத்திற்காகப் பயன்படும் பொருள்கள். உடலும் மனமும் இன்புற்றிருக்க நாம் சேர்க்கும் பொருள்கள் காமம். இது, தன்னைப் பாதுகாத்தபின் மனதில் அடுத்து உதிக்கும் லக்ஷ்யம். உடலுக்கும் மனதிற்கும் இன்பத்தைக் கொடுக்க காமம் பயன் படுகிறது. அர்த்தத்தின் பலன் துக்கநிவ்ருத்தியும் காமத்தின் பலன் ஸுகப்ராப்தியும் ஆகும். உதாரணமாக பசியை நீக்க நாடும் உணவுப் பொருள் அர்த்தம். சுவைக்காக நாடும் உணவுப்பொருள் காமம்.

தர்மம் என்பது புண்யம். கண்ணிற்குத் தெரியாத இந்தப் புண்யமானது வேதத்தில் கூறிய கர்மங்களைச் செய்வதாலும் தர்மத்திற்கு முரணாகாத செயல்களாலும் அடையப்படுகிறது. இவ்வாழ்விலும் வரப்போகும் வாழ்விலும் துயரத்தை நீக்கவும் ஸுகத்தை அடையவும் புண்யமானது பயன்படுகிறது.

கர்மகாண்டம் என அழைக்கப்படும் வேதத்தின் முதல்பாகம், அர்த்த-காம-தர்மங்களை அடையப் பலவித உபாயங்களைப் பற்றிக் கூறுகிறது. உபாயங்களைக் கூறிய போதிலும் அதே வேதம் இறுதியில் இம்மூன்றிலும் உள்ள குறைபாடுகளையும் எடுத்துக் காட்டுகிறது. இம்மூன்றின் மூலமாக மனிதர்கள் இன்பத்தைத் துய்க்க நாடிக்கொண்டு இருக்கிறார்கள். இன்பமே மனிதர்களின் முடிவான இலக்காகத் தோன்றும்பொழுது இன்பத்தில் உள்ள குறைகளை இவ்விதம் கூறுகிறது:

1. ஒவ்வொரு இன்பத்திலும் துன்பம் கலந்தே உள்ளது. இன்பத்தைத் தரும் பொருளை அடைதல், அவற்றைப் பாதுகாத்தல், அவற்றின் இழப்பு முத ய காரணங்களால் அனைத்து இன்பங்களும் துயரத்துடன் கலந்ததாகவே உள்ளன.

2. எந்த இன்பமும் மனதில் முழு நிறைவைக் கொடுப்பதில்லை.

3. அனைத்து இன்பங்களும் பொருள்களைச் சார்ந்திருக்கச் செய்து நம்மை அடிமையாக்குகின்றன.

இவ்விதம் நமக்கு குறைகளைக் காட்டி, இக்குறைகளற்ற மோக்ஷம் என்ற லக்ஷ்யத்தை நமக்கு வேதம் அறிமுகப்படுத்துகிறது. அந்த மோக்ஷத்தை அடையப் பாதையையும் காட்டித்தருகிறது.

மோக்ஷம் என்பதுதான் மனிதனின் உண்மையான, மேலான லக்ஷ்யம். மோக்ஷம் என்பது முழு மனநிறைவை அடைதல். நம் மிடத்திலேயே முழு நிறைவைக் காணுதல். மோக்ஷத்தை அடைவதன் மூலம் அர்த்த, காம, தர்மங்களுக்கு நாம் அடிமைப்படாமல் அவை தேவை என்ற நிபந்தனைகளி ருந்து விடுபடுகிறோம். அவை நமக்கு ஆடம்பரப் பொருள்கள் போல் ஆகின்றன. எந்த

நிபந்தனையுமின்றி மனதில் நம்மால் அறியப்படும் நிறைவே மோக்ஷமாகிறது. மோக்ஷமே வேதத்தின் கடைசிப் பகுதியி ருந்து கிடைக்கும் அறிவின் பலன்.

வேதத்தின் கடைசிப் பகுதியானது வேதாந்தம், ஞான காண்டம், உபநிஷத் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. வேதத்தின் கடைசிப் பகுதியில் அமைந்ததால் வேதாந்தம் எனவும் மெய்ப் பொருளைப் பற்றிய அறிவை மையமாகக் கொண்டதால் ஞானகாண்டம் எனவும் ஸம்ஸாரத்தை நீக்கும் மெய்ப்பொருளைப் பற்றிய ஞானம் என்ற பொருளைக்கொண்டதால் உபநிஷத் எனவும் பெயர் பெற்றுள்ளது. உபநிஷத் என்ற சொல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு பொருள் கொள்ளப்படுகிறது.

उप - உப - குருவின் அருகே செல்லுதல்

नि - நி - மெய்ப்பொருளைப் பற்றிய ஞானத்தை அடைதல்

षत् - ஷத் - துயரத்தை நீக்குதல்

குருவை அடைந்து பெறப்பட்ட, ஸந்தேஹமற்ற எந்த ஞானத்தினால் ஒருவன் துயரத்தி ருந்து விடுபடுகிறானோ, அந்த ஞானமே உபநிஷத். அப்படிப்பட்ட ஞானத்தைக் கொடுக்கும் நூலையும் உபநிஷத் என்று அழைக்கிறோம்.

மோக்ஷம் என்ற லக்ஷ்யத்தை அடைவதற்காக ஒருவனுடைய உண்மையான தன்மையை வேதாந்தம் எடுத்து விளக்குகிறது. எப்பொழுதும் பந்தப்படாத தன் உண்மையான ஆத்ம ஸ்வரூபத்தை அறிவதன் மூலமே மோக்ஷத்தை அடையமுடியும் என்பதால் ஆத்ம ஞானம் உபாயமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆத்ம ஞானத்தை நமக்குக் கொடுக்க வேதாந்தம் சில முறைகளைக் கையாளுகிறது. குருவின் துணைகொண்டு வேதாந்தத்தைப் பயன்படுத்தும் பொழுதுதான் நாம் முழுப்பலனை அடையமுடியும். ஆகவே ஞானத்திற்குக் கருவியாக விளங்கும் வேதாந்தம் எவ்வளவு முக்கியமோ அதே அளவு குருவும் முக்கியமாகிறார்.

உபநிஷத் பொதுவாக குரு-சிஷ்யனின் உரையாடலாக அமைந்திருக்கும். ஒன்று அல்லது பல உரையாடல்கள் சேர்ந்து ஒரு உபநிஷத் ஆகும். ஒவ்வொரு வேதத்தின் கடைசியிலும் பல உபநிஷத்துக்கள் உள்ளன.

அவற்றில் இங்கு ஏழு உபநிஷத்துக்களின் சாரம், மூலம், எழுத்துப் பெயர்ப்பு, சொற்பொருள், மொழிபெயர்ப்பு, ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன.

ॐ

# मुण्डकोपनिषद्
# முண்ட₃கோபநிஷத்₃

## சாரம்

இந்த உபநிஷத் அதர்வணவேதத்தில் அமைந்துள்ளது. முண்டகம் என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உள்ளன. 1. சீர்ஷம் (தலை) 2. ப்ரதானம் (முக்யம்). தலையில் அக்னியை சுமந்து செய்யப்படும் ஒரு யாகத்தை நிகழ்த்தியபின் இந்த உபநிஷத்தைப் படிக்க ஆரம்பிப்பதால் இப்பெயர் பெறுகிறது. அல்லது தலைமுடியை அகற்றியபின் இவ்வுபநிஷத்தைப் படிப்பதற்கு ஆரம்பிப்பதாலும் இப்பெயர் பெறுகிறது.

இவ்வுபநிஷத் மூன்று அத்யாயங்களாகவும் ஒவ்வொரு அத்யாயமும் இரண்டு பகுதிகளாகவும் பிரிந்து அமைந்துள்ளது. இங்கு அத்யாயம் முண்டகம் என்றும் பகுதி கண்டம் என்றும் பெயர் பெற்றுள்ளன.

### முதல் முண்டகத்தில் முதல் கண்டம்

பரம்பொருளைப் பற்றிய ஞானத்தின் பெருமையைக் கூறி இந்த உபநிஷத் துவங்குகிறது. இந்த ஞானம் அனைத்து ஞானத்திற்கும் ஆதாரமாகவும் வாழ்வில் நிறைவைக் கொடுக்கக் கூடியதாகவும் இருப்பதால் இந்த ஞானத்தின் பெருமையை உணர்வது அவசியமாகிறது. இந்த ஞானமானது, இவ்வுலகைப் படைத்து, காத்து வருகின்ற ப்ரஹ்மதேவனால் தன்னுடைய மகனுக்கு உபதேசிக்கப் பட்டு, பின்னர் அவரால் அவருடைய சிஷ்யருக்கு உபதேசிக்கப் பட்டு, பரம்பரையாக வந்துகொண்டு இருக்கிறது (1, 2). அந்தப் பரம்பரையில் வந்த சௌனகர் என்பவர் அங்கிரஸ் என்பவரை முறைப்படி அணுகி, இவ்விதம் ஒரு கேள்வியைக் கேட்கின்றார் (3).

இறைவா, எதை அறிவதனால் இவை அனைத்தும் அறிந்தது ஆகும்? என்பதே கேள்வி. இக்கேள்விக்கு பதிலே இவ்வுபநிஷத். இக்கேள்வியை சற்று ஆராய்ந்தால், ஒன்றை அறிவதனால், மற்ற அனைத்தையும் எப்படி அறிந்ததாகும் என்ற ஸந்தேஹம் எழுகிறது. ஒன்றைப் பற்றிய ஞானத்தால் மற்ற அனைத்தைப் பற்றிய ஞானமும் அடையவேண்டும் என்றால் அந்த ஒன்று மற்ற அனைத்திற்கும் காரணமாக இருக்கவேண்டும். ஆகவே, மூலகாரணத்தை அறிவதனால், அதி ருந்து தோன்றிய அனைத்துக் காரியங்களும் அறியப்படுவதாகின்றன. அந்த மூலகாரணமே உபாதான காரணம் என்று அழைக்கப்படுகிறது. உதாரணமாக, விதவிதமான உருவில் உள்ள பானைகளுக்கு, களிமண் உபாதான காரணமாகிறது. இந்த உபாதான காரணமான களிமண்ணை அறிவதனால் அனைத்துப் பானைகளின் தன்மை அறியப்படுகிறது. அதுபோல், அனைத்து உலகிற்கும் எந்த ஒன்று உபாதான காரணம் என்பதே கேள்வியின் மையப்பொருள்.

இவ்விதம் கேட்கப்பட்ட கேள்விக்கு, குருவானவர், இரண்டுவிதமான ஞானமானது ஒவ்வொருவராலும் அடையப்பட வேண்டியது என்று பதிலைத் துவக்குகிறார் (4). அவை முறையே 1. பரா வித்யா 2. அபரா வித்யா என்பதாகும். பரா வித்யா என்பது ஆத்மவித்யா, காரணஞானம், ப்ரஹ்மஞானம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. அபரா வித்யா என்பது அனாத்மவித்யா, கார்யஞானம், நிலையற்ற பொருளைப் பற்றிய ஞானம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. அறிவை இவ்விதம் இரண்டாகப் பிரித்த குருவானவர் எவை யெல்லாம் அபரா வித்யா என்று அடுத்து விளக்குகிறார்.

ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் ஆகிய நான்கு வேதங்களும் வேதங்களின் அங்கமாக இருக்கின்ற சிக்ஷா, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம். இந்த ஆறும் அபரா வித்யா ஆகின்றன (5).

இவ்விதம், அனைத்து அறிவையும் அபரா வித்யா என்று கூறிய பின்னர் பரம்பொருளின் தன்மையை வர்ணித்து, இப்படிப்பட்ட

பரம்பொருளை எந்த அறிவானது க்ரஹிக்கிறதோ, அந்த அறிவே பரா வித்யா என்று இயம்புகிறார். இங்கு அனைத்து வேதங்களும் அபரா வித்யா என்று அழைக்கப்பட்டதால் வேதத்தின் கடைசிப் பகுதியில் அமைந்துள்ள உபநிஷத்துக்களும் அபரா வித்யாவாக ஆகுமே என்ற ஐயம் எழும்பொழுது, உபநிஷத் மந்த்ரங்களை உச்சரிக்கும் முறையை, அதாவது சப்தஞானத்தை அபரா வித்யா என்றும் உபநிஷத் மந்த்ரங்களால் அறியப்படும் பரம்பொருளைப் பற்றிய அர்த்த ஞானத்தை பரா வித்யா என்றும் புரிந்துகொள்ள வேண்டும்.

எந்த ஒன்று கண்களால் காணப்படாததோ, அதுபோல மற்ற ஞானேந்த்ரியங்களால் அறியப்படாததாகவும் கை போன்ற கர்மேந்த்ரியங்களால் க்ரஹிக்கப்படாததாகவும் குணங்களற்றதாகவும் பிறப்பற்றதாகவும் கண்கள் காதுகள் போன்ற ஞானேந்த்ரியங்கள் அற்றதாகவும் கர்மேந்த்ரியங்கள் அற்றதாகவும் என்றும் உள்ளதாகவும் அனைத்தையும் வ்யாபித்தும் மிகவும் ஸூக்ஷ்மமாக, அழியாததாக, பலவிதமாகத் தன்னை வெளிப்படுத்தி, அனைத் துக்கும் உபாதான காரணமாக இருக்கிறதோ அந்த ப்ரஹ்மனை தீரர்கள் தெளிவாக அறிகிறார்கள் என்று ப்ரஹ்மனின் ஸ்வரூபத்தை விளக்குகிறார். இத்தகைய ப்ரஹ்மனைப் புரிந்து கொள்ளும் அறிவே பரா வித்யா ஆகும் (6). இதில் பூதயோனி என்ற ஒரு சொல் ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாகக் கூறப்பட்டுள்ளது. பூதயோனி என்ற சொல் உபாதான காரணத்தைக் குறிக்கிறது.

ஒரு பொருள் தோன்றவேண்டும் என்றால் இரண்டு விதமான காரணங்கள் தேவைப்படுகின்றன: 1. உபாதான காரணம், 2. நிமித்த காரணம். பானைகளுக்குக் களிமண் உபாதான காரணமென்றால், குயவன் நிமித்த காரணம். நாம் அனுபவிக்கின்ற இந்த அனைத்துப் படைப்பிற்கும் இரண்டு காரணங்கள் எவை என்பதற்கு, ப்ரஹ்மனே இரண்டு காரணமாகவும் இருக்கிறது என்ற கருத்து கூறப்படுகிறது. இக்கருத்து உதாரணங்களின் மூலமாக மேலும் விளக்கப்படுகிறது. எவ்விதம் சிலந்திப்பூச்சியானது, தான் உருவாக்கிய வலைக்குத் தானே நிமித்த காரணமாகவும் உபாதான காரணமாகவும்

இருக்கிறதோ, அதுபோல் இப்படைப்பிற்கு ப்ரஹ்மன் ஒன்றே இவ்விரு காரணங்களாகவும் விளங்குகிறது (7).

ஆகவே இந்த ப்ரஹ்மனை அறிவதனால் அனைத்தையும் அறிந்ததாகும் என்பது பொருந்துகிறது. இந்த ப்ரஹ்மனே உபாதான காரணம் என்று கூறிய ஆசிரியர் அதுவே நிமித்த காரணமாகவும் இருக்கிறது என்றும் விளக்கி இந்த முதல் கண்டத்தை நிறைவு செய்கிறார் (8, 9).

## முதல் முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

இந்தப் பகுதியில் குரு, அபரா வித்யையைப் பற்றிப் பேசுகிறார். வேதத்தின் முதல்பகுதி கர்மகாண்டம் என்று அழைக்கப்படுகின்றது. கர்மகாண்டத்தில் விதவிதமான யாகங்கள் இகலோக இன்பத் திற்காகவும் சொர்க்கம் முத ய பரலோக இன்பத்திற்காகவும் பேசப் படுகின்றன. இங்கு கர்மத்தின் பலன்களையும் குறைபாடு களையும் விளக்குகிறார்.

முதல் ஆறு மந்த்ரங்களில் கர்மத்தினுடைய பெருமையும் அதனால் அடையப்படும் பலனும் பேசப்படுகிறது. கர்மபலனில் விருப்பம் உடையவர்கள், கர்மத்தை செய்துதான் ஆக வேண்டும். செய்த கர்மம் வீண்போவதில்லை (1). கர்மங்களில் முக்கிய கர்மமான அக்னிஹோத்ரம் உதாரணமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதை முறையாகச் செய்யவேண்டும். இல்லையெனில் விபரீத பலன் தோன்ற வாய்ப்புண்டு என்று எச்சரிக்கை விடுக்கப்படுகிறது (2, 3). யாகத்தில் பயன்படுத்தப்படும் நெருப்புக்கு விதவிதமான பெயர்கள் குறிப்பிடப்படுகிறது (4). யாகத்தின் பலனாக, அதன் யஜமானன் ஸ்வர்கலோகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஸுக போகங்களை அனுபவிக்கிறான் (5, 6).

அடுத்து கர்மத்தின் சிறுமையும் அதனால் அடையப்படும் பலனின் நிலையற்ற தன்மையும் பேசப்படுகிறது. சிறு படகைத் துணையாகக் கொண்டு கடலைக் கடக்க முடியாதது போல், கர்மத்தின் துணைகொண்டு ஸம்ஸாரக்கடலைக் கடக்க முடியாது (7).

கர்மத்தையே முடிவான துணையாகக் கொண்டவர்கள், தங்களைப் பண்டிதர்களாகவும் கருதி, குருடனால் வழிநடத்தப்பட்ட குருடன் போல், கீழ்மையான நிலையை அடைகிறார்கள் (8, 9, 10). கர்மம் என்பது உடலாலும் வாக்காலும் உருவாகின்ற செயல். மனதால் செய்யப்படுகின்ற த்யானம் முத ய செயலுக்கு உபாசனை என்று பெயர். இதை மேற்கொள்கின்ற உபாசகர்கள், கர்மம் செய்ப வர்களைக் காட்டிலும் அதிக பலனை இவ்வுலகில் அடைந்து, மேலுலகில் சொர்க்கத்திற்கும் மேலாக இருக்கின்ற ப்ரஹ்ம லோகத்தை அடைகிறார்கள். இவர்கள் அடையும் பலனும் நிலையற்றது (11).

இவ்விதம், கர்மத்தின் பெருமையையும் உபாசனையின் பெருமையையும் பிறகு, சிறுமையையும் அதாவது நிலையற்ற பலனையே கொடுக்கும் தன்மையையும் விளக்கிய குருவானவர், கர்மகாண்டத்தி ருந்து ஞானகாண்டத்திற்குப் பாலமாக அமையும் ஸாதனைகளை அழகாக விளக்குகிறார். இவ்வுலகை ஆராய்ச்சி செய்து, அதிலுள்ள குறைகளை உணர்ந்ததால் வைராக்யத்தை அடைந்த சாதகன், மோக்ஷத்திற்கு கர்மம் நேரடியான ஸாதனம் அல்ல என்பதையும் உணர்ந்து, பணிவான மனதுடன், மரபுவழி வந்தவராகவும் ப்ரஹ்மனில் நிலைபெற்றவராகவும் இருக்கின்ற குருவை அடைந்துதான் ஆக வேண்டும் (12). இவ்விதம் தம்மை அடைந்த சிஷ்யனுக்கு குருவானவர் பரப்ரஹ்ம தத்துவத்தை விளக்குகிறார் (13).

## இரண்டாவது முண்டகத்தில் முதல் கண்டம்

இந்தப் பகுதியி ருந்து பரா வித்யாவுக்கு விஷயமான ப்ரஹ்மனைப் பற்றிய விளக்கம் ஆரம்பிக்கப்படுகிறது. பரப்ரஹ்மனே அனைத்து உலகத்திற்கும் ஜீவராசிகளுக்கும் உபாதான காரணமாக விளங்குகிறது (1). அதே சமயத்தில், ப்ரஹ்மன், தோன்றிய அனைத் திற்கும் ஆதாரமாகவும் அவற்றால் வரையறுக்கப் படாமலும் விளங்கிக் கொண்டிருக்கிறது (2). ப்ரஹ்மனே ஜீவனுக்கும் ஜகத்திற்கும் காரணமாக இருப்பதால் ப்ரஹ்மனை அறிவதால் அனைத்தையும்

அறிந்ததாகிறது. அந்த ப்ரஹ்மன் காரணமாகவும் அதே சமயத்தில் மாற்றமடையாத தத்துவமாகவும் உள்ளது என்று விளக்கப்பட்டு, ப்ரஹ்மனிடம் இருந்து ஐந்து பூதங்களின் தோற்றமும் ப்ராணன், மனம் போன்றவைகளின் தோற்றமும் கூறப்படுகிறது (3). படைக்கப்பட்ட ஸ்தூல உலகத்திற்கு அதிபதியாக விளங்கும் ப்ரஹ்மன் விராட் என்று அழைக்கப்படுகிறது. இவ்வுலகமே விராட்டின் உடலாக உருவகப் படுத்தப்படுகிறது (4). இவ்வுலகில் தோன்றிய சிலவற்றைக் குறிப்பிட்டு இவை அனைத்தும் ப்ரஹ்மனிடமிருந்து வந்தவை என காட்டப் படுகிறது (5 – 9). அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் ப்ரஹ்மனே ஒருவனுடைய ஆத்மசொரூபமாக உள்ளது எனக்கூறி, தோன்றியவை வெறும் தோற்றமே என்றும் கூறி, இப்படிப்பட்ட அறிவை அடைபவன் ஸம்ஸாரத்தி ருந்து விடுதலை அடைகிறான் என்பதுடன் இப்பகுதி முடிவடைகிறது (10).

## இரண்டாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

இப்பகுதியில் பரப்ரஹ்மனின் ஸ்வரூபம், சில ஸாதனைகள், ப்ரஹ்மஞானத்தின் பலன் ஆகியவை பேசப்படுகின்றன. அறிவு ஸ்வரூபமான ப்ரஹ்மன், ஜீவனுடைய மனதில் விளங்கிக் கொண்டி ருக்கிறது. அனைத்து உயிர்த்திரள்களும் இந்த ப்ரஹ்மனை ஆதாரமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இந்த ப்ரஹ்மனே, ஒருவனால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய லக்ஷ்யம் ஆகிறது (1). அறிவு ஸ்வரூபமான இந்த ப்ரஹ்மன், சிறியதைக் காட்டிலும் சிறியதாகவும் அதே சமயத்தில் அனைத்துமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ப்ரஹ்மனை ஒரு ஜீவன் இலக்காக வைத்து அடைய வேண்டும் (2). வில் ன் துணையோடு ஒரு அம்பானது இலக்கை அடைவதை உதாரணமாகக் கொண்டு சில ஸாதனைகள் விளக்கப்படுகின்றன. வில் – உபநிஷத், அம்பு – ஜீவாத்மா, இலக்கு – பரமாத்மா. அம்பானது வில் ன் துணையோடு இலக்கினையடைய வேண்டுமானால், அந்த அம்பு கோணலற்றதாகவும் கூர்மையான தாகவும் வில் ல் நன்கு பொருத்தப்பட்டதாகவும் இலக்கிற்கு நேராகவும் இருக்கவேண்டும். அது போல, அம்பாக வர்ணிக்கப் பட்ட ஜீவன் தூய்மையான மனதுடனும் ஒருமுகப்படுத்தப்பட்ட

மனதுடனும் வில்லாக வர்ணிக்கப்பட்ட உபநிஷத்தில் முழு நம்பிக்கை பொருந்தியவனாகவும் ப்ரஹ்மனாக வர்ணிக்கப்பட்ட இலக்கு ஒன்றையே குறியாகக் கொண்டவனாகவும் இருக்கும் பொழுது இலக்குடன் அம்பு ஒன்றாவது போல் ப்ரஹ்மனுடன் ஜீவன் ஒன்றாகின்றான் (3, 4). அந்த ப்ரஹ்மனிடத்தில் பூமி முதற்கொண்டு அனைத்து உலகங்களும் மனம், ப்ராணன் போன்ற அனைத்து தத்துவங்களும் கோர்க்கப்பட்டுள்ளன. தானே அந்த ப்ரஹ்மன் என்பதை அறியவேண்டும் என்று கூறி, இந்த ஞானத்தில் நிலைபெற தேவையற்ற பேச்சை நிறுத்தவேண்டும் என்பது ஸாதனையாகக் கூறப்படுகிறது (5).

குருவானவர், அனைத்துமாக விளங்குகின்ற இந்த ப்ரஹ்மனை த்யானித்து அறியாமையைக் கடக்க சிஷ்யனை ஆசீர்வதிக்கிறார் (6). எவருடைய மகிமை இவ்வுலகமாக விளங்கிக்கொண்டு இருக்கிறதோ, அவர், மனதிற்குள் இருந்துகொண்டு அனைத்தையும் நடத்தி வருகிறார். தீரர்கள் அதை மரணமற்ற, ஆனந்தஸ்வரூபமாக விளங்கு வதாக அறிகிறார்கள் (7, 8). இப்படிப்பட்ட ஞானத்தால், அறியாமை என்ற கயிறானது அறுபட்டு, சந்தேகங்களெல்லாம் நீக்கப்பட்டு, அனைத்துக் கர்மங்களி ருந்தும் விடுதலை கிடைக்கின்றது (9). அறிவைக் கொடுக்க உதவுகின்ற காரணங்களான மனம், இந்த்ரியங்கள் போன்றவை ஜ்யோதி என்றால், ப்ரஹ்மன் ஜ்யோதிகளுக்கு ஜ்யோதியாக விளங்குகிறது (10). இவ்வுலகில் ஜ்யோதியாக விளங்கிவரும் ஸூர்யன், சந்திரன் போன்றவை ப்ரஹ்மனை விளக்காது. ஆனால் ப்ரஹ்மனால் இவை விளங்கி வருகின்றன (11). தோன்றிய இவை அனைத்தும் கயிற்றில் பாம்பு தோன்றுவது போல, வெறும் தோற்றமேயன்றி உண்மையல்ல என்று இந்த ஜகத்தை நீக்கி, ப்ரஹ்மன் மட்டுமே இரண்டற்றதாக இருக்கிறது என்றவாறு இப்பகுதி முடிவடைகிறது (12).

## மூன்றாவது முண்டகத்தில் முதல் கண்டம்

இப்பகுதியில் ஞானத்துக்குத் தேவையான ஸாதனைகள், ஜீவ ஈச்வர ஐக்கியம், அந்த ஞானத்தின் பலன் முத யன பேசப்படுகின்றன.

ஸம்ஸாரத்தின் காரணத்தையும் அதி ருந்து விடுபட உபாயத்தையும் விளக்க ஓர் உவமையுடன் இப்பகுதி துவங்குகிறது. ஒரு மரத்தில் இரு பறவைகள் அமர்ந்துள்ளன. ஒரு பறவை, மரத்திலுள்ள கனியை சுவைக்கிறது. மற்றொன்று, பார்த்தவண்ணம் அமர்ந்திருக்கிறது. இதில், நமது உடல்-மரம், கனியை சுவைக்கும் பறவை-ஜீவாத்மா, கனியை சுவைக்காத பறவை-பரமாத்மா. ஜீவாத்மா, ஸுகதுக்கம் என்கின்ற கனியை சுவைத்து, கர்த்தாவாகவும் போக்தாவாகவும் இருந்து ஸம்ஸாரியாக இருக்கிறான். பரமாத்மா ஸாக்ஷியாக இருந்து கொண்டு அஸம்ஸாரியாக இருக்கிறது. சோகத்தில் ஆழ்ந்த ஜீவன் தன்னை எப்பொழுது அந்த பரமாத்மாவாக ஞானத்தின் மூலம் மாற்றிக் கொள்கிறானோ, அப்பொழுது சோகத்தி ருந்து விடுதலை அடைகிறான் (1, 2). இவ்விதம், பரமாத்மஸ்வரூபத்தை அடைய ஞானமே மூலகாரணம் எனப்புகட்டி, அந்த ஞானத்தின் பலனாக புண்ணிய, பாவத்தை விட்டு பரப்ரஹ்மனுடன் ஐக்கியத்தை அடைந்து தேவையற்ற பேச்சுக்களைத் துறந்தவனாக மாறி தன்னிடத்தில் இன்புற்று இருக்கிறான் (3, 4). இந்த ஞானத்துக்கு ஸாதனைகளாக வாய்மை, தவம், சாஸ்த்ரத்தை நம்பிக்கையுடன் கேட்டல், ப்ரஹ்மச்சர்யம் முத யவற்றைக் கூறி (5), பிறகு வாய்மையின் மகிமை பேசப் படுகிறது (6). ப்ரஹ்மதத்துவமானது அனைத்து இருமைகளையும் கடந்துள்ளது என்பதை விளக்க, தூரத்தில் உள்ளது, அருகேயும் உள்ளது, பெரிதாகவும் உள்ளது, சிறிதாகவும் உள்ளது போன்ற விதங்களில் விளக்கி, ப்ரஹ்மன் சைதன்ய ஸ்வரூபமாக நமக்குள் விளங்குகிறது என்று விளக்கப்படுகிறது (7). இப்படிப்பட்ட ப்ரஹ்ம தத்துவத்தைக் கண்கள் முத ய எந்த இந்த்ரியங்களாலும் க்ரஹிக்க முடியாது என்றும் வாக்கு முத ய கர்ம இந்த்ரியங்களாலும் எவ்வித தவத்தாலும் அறிய முடியாது என்றும் கூறி, அமைதியை அடைந்த மனதின் துணைகொண்டு, ஞானத்தால் அறியப்படும் என்பதால், அதற்கு மனம் இன்றியமையாததாக இருக்கிறது என்று கூறப்படுகிறது (8, 9). ஞானத்தின் பெருமையைக் கூற, ஞானியின் பெருமை பேசப்படுகிறது. ஞானியானவன், இறைவனுக்குச் சமமாகக் கூறப்பட்டு லௌகிக ஸுகத்தை அடைய

விரும்புபவர்கள், ஞானியை வணங்கினாலே, அது இறைவனை வணங்குவது ஆவதால், ஞானியை வணங்கியே அவர்கள் விரும்பிய பலனை அடைவார்கள் (10).

## மூன்றாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

இந்த இறுதிப் பகுதியிலும் ஸாதனைகளின் முக்கியத்துவமும் ஞானத்தின் பலனும் கூறப்படுகிறது.

மோக்ஷத்தை அடைய விரும்புபவர்களும் ஞானியின் துணையை நாடவேண்டும். அவ்வாறு நாடிப் பயனை அடைந்த தீரர்கள் துயரத்தைக் கடக்கிறார்கள் (1). ஒருவன் எப்பொருளை நினைத்து ஆசைப்பட்டவனாக இறந்துவிடுகிறானோ, அவன் மறுபிறப்பில் அப்பொருளை அனுபவிக்கும் சூழ்நிலையில் பிறக்க நேரிட்டு, அப்பொருளை அனுபவிக்கிறான். இங்கேயே அனைத்து ஆசைகளையும் நீக்கியவனுக்கு மறுபிறப்பு ஏற்படுவதில்லை (2). ஒரு குறிப்பிட்ட ஸாதனையை உயர்த்திக்கூற, மற்ற ஸாதனைகளை சற்று தாழ்வுபடுத்திக்கூறுதல் ஒரு மரபாக இருக்கிறது. அவ்விதத்தில் முமுக்ஷுத்துவத்தின் பெருமையைக் கூற, மற்ற ஸாதனைகளான சாஸ்த்ரத்தைக் கேட்டல், அவற்றை ஓதுதல் போன்றவற்றால் மட்டும் இந்த ஆத்மா அடையப்படமுடியாது எனக் கூறி, எவர்கள் இந்த ஆத்மதத்துவத்தையே லக்ஷ்யமாகத் தேர்ந்தெடுக்கிறார்களோ, அவர்களை இறைவன் தன் ஸ்வரூபத்தை விளக்கத் தேர்ந்தெடுக்கிறார் என்று கூறப்படுகிறது (3). இந்த ஆத்ம தத்துவத்தை, மனதில் பலஹீனமாக இருப்பவர்களாலும் கவனக் குறைவுடன் இருப்பவர்களாலும் வைராக்யமற்ற ஞானத்தாலும் அடையமுடியாது என்று கூறப்படுகிறது (4). ரிஷிகள், இந்தத் தத்துவத்தை அடைந்து, ஞானத்தில் திருப்தி அடைந்தவர்களாகவும் செய்ய வேண்டியவற்றை எல்லாம் செய்து முடித்தவர்களாகவும் அனைத்தையும் வ்யாபிக்கின்றனர் (5). வேதாந்த ஞானத்தில் நிச்சயத்தை அடைந்து த்யாகத்தால் தூய்மை அடைந்தவர்கள், ஜீவன்முக்தர்களாக இருந்துகொண்டு இறுதியான மரணத்தை அடைந்தவர்கள், ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே இருந்து மீண்டும்

பிறப்பதில்லை (6). அவர்களுடைய ஸூக்ஷ்மசரீரம் அந்தந்த தேவதைகளுடன் சேர்ந்துவிட, அவர்கள் அழியாத ப்ரஹ்மனிடம் ஒன்றாகவே இருக்கிறார்கள் (7). நதிகள் தங்களுடைய நாமரூபத்தை இழந்து கட ல் கலப்பது போல, ஞானிகள் ப்ரஹ்மனிடத்தில் கலந்து ப்ரஹ்மனாகவே இருந்து, பாவத்தையும் சோகத்தையும் கடந்து விடுகிறார்கள் (8, 9). கடைசி இரண்டு மந்த்ரங்களில், இந்த உபநிஷத்தைத் தகுதியுள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் இங்கு குரு கூறியது அனைத்தும் உண்மை என்றும் உபநிஷத் கூறி முடிக்கிறது (10, 11).

## शान्तिपाठः
சா1ந்திபாட2:

**भद्रं कर्णेभिः श्रृणुयाम देवाः। भद्रं पश्येमाक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः। स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्ताक्ष्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु। ओं शान्तिः शान्तिः शान्तिः ॥**

ப4த்3ரம் கர்ணேபி4: ச்1ருணுயாம தே3வா:। ப4த்3ரம் பச்1யேமாக்ஷபி4ர்யஜத்ரா:। ஸ்தி2ரைரங்கை3ஸ்துஷ்டு வாம்ஸஸ்தனூபி4:। வ்யசே1ம தே3வஹிதம் யதா3யு:। ஸ்வஸ்தி ந இந்த்3ரோ வ்ருத்3த4ச்1ரவா:। ஸ்வஸ்தி ந: பூஷா விச்1வவேதா3:। ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டனேமி:। ஸ்வஸ்தி நோ ப்3ருஹஸ்பதிர்த3தா4து। ஓம் சா1ந்தி: சா1ந்தி: சா1ந்தி: ॥

**देवाः** தே3வா: தேவர்களே **कर्णेभिः** கர்ணேபி4: செவிகளால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **श्रृणुयाम** ச்1ருணுயாம கேட்போமாக. **यजत्राः** யஜத்ரா: வணக்கத்திற்குரிய தேவர்களே **अक्षभिः** அக்ஷபி4: கண்களால் **भद्रं** ப4த்3ரம் நல்லதை **पश्येम** பச்1யேம பார்ப்போமாக. **स्थिरैः अङ्गैः** ஸ்தி2ரை: அங்கை3: உறுதியான உறுப்புக்களுடன் **तनूभिः** தனூபி4: வேதங்களால் (உங்களை நாங்கள்) **तुष्टुवांसः** துஷ்டுவாம்ஸ: புகழ்ந்துகொண்டு **यद् आयुः** யத்3 ஆயு: எவ்வளவு ஆயுள் **देवहितं** தே3வஹிதம் இறைவனால் (எங்களுக்கு) கொடுக்கப்பட்டுள்ளதோ (அதை) **व्यशेम** வ்யசே1ம அனுபவிப்போமாக. **वृद्धश्रवाः** வ்ருத்3த4ச்1ரவா: ஓங்கிய புகழையடைந்த **इन्द्रः** இந்த்3ர: இந்த்ரன் **नः** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **विश्ववेदाः** விச்1வவேதா3: அனைத்தையும் அறிகின்ற **पूषा** பூஷா ஸூர்யதேவர் **नः** ந:

எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **अरिष्टनेमि:** அரிஷ்டனேமி: தடையின்றிச் செல்லும் **तार्क्ष्य:** தார்க்ஷ்ய: கருடதேவர் **न:** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை (அருளட்டும்). **बृहस्पति:** ப்₃ருஹஸ்பதி: (பேரறிவுடைய) ப்ருஹஸ்பதி **न:** ந: எங்களுக்கு **स्वस्ति** ஸ்வஸ்தி நன்மையை **दधातु** த₃தா₄து அருளட்டும். **ओं शान्ति:** ஓம் சா₁ந்தி: ஓம் சாந்தி **शान्ति:** சா₁ந்தி: சாந்தி **शान्ति:** சா₁ந்தி: சாந்தி.

தேவர்களே, செவிகளால் நல்லதைக் கேட்போமாக. வணக்கத்திற்குரிய தேவர்களே, கண்களால் நல்லதைப் பார்ப்போமாக. உறுதியான உறுப்புக்களுடன் வேதங்களால் உங்களை நாங்கள் புகழ்ந்து கொண்டு எவ்வளவு ஆயுள் இறைவனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதை அனுபவிப்போமாக. ஓங்கிய புகழையடைந்த இந்த்ரன் எங்களுக்கு நன்மையை அருளட்டும். அனைத்தையும் அறிகின்ற ஸூர்யதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். தடையின்றிச் செல்லும் கருடதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். பேரறிவுடைய ப்ருஹஸ்பதி எங்களுக்கு நன்மையை அருளட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

இங்கு சாந்தி என்ற சொல் ற்கு தடைகள் நீங்கட்டும் என்பது பொருள். இயற்கை, சூழ்நிலை, உடல் முத ய மூன்று இடங்களி ருந்து வரும் தடைகள் அமைதி அடைய வேண்டும் அதாவது நீங்கவேண்டும் என்று மும்முறை கூறப்படுகிறது.

## प्रथममुण्डके प्रथमः खण्डः

முதல் முண்டகத்தில் முதல் கண்டம்

१. ब्रह्मा देवानां प्रथमः सम्बभूव विश्वस्य कर्ता भुवनस्य गोप्ता।
स ब्रह्मविद्यां सर्वविद्याप्रतिष्ठाम् अथर्वाय ज्येष्ठपुत्राय प्राह॥

1. ப்3ரஹ்மா தே3வானாம் ப்ரத2ம: ஸம்ப3பூ4வ
விச்1வஸ்ய கர்தா பு4வனஸ்ய கோ3ப்தா ।
ஸ ப்3ரஹ்மவித்3யாம் ஸர்வவித்3யாப்ரதிஷ்டா2ம்
அத2ர்வாய ஜ்யேஷ்ட2புத்ராய ப்ராஹ ॥

**ब्रह्मा** ப்3ரஹ்மா ப்ரஹ்மா **देवानां** தே3வானாம் தேவர்களுள் **प्रथमः** ப்ரத2ம: முதன்மையானவராகவும் முக்கியமானவராகவும் **संबभूव** ஸம்ப3பூ4வ தோன்றினார். **विश्वस्य** விச்1வஸ்ய (அவர்) உலகத்தை **कर्ता** கர்தா படைப்பவராகவும் **भुवनस्य** பு4வனஸ்ய உலகத்தை **गोप्ता** கோ3ப்தா காப்பவராகவும் (இருக்கிறார்). **सः** ஸ: அவர் **सर्व-विद्या-प्रतिष्ठां** ஸர்வ-வித்3யா-ப்ரதிஷ்டா2ம் அனைத்து அறிவிற்கும் ஆதாரமாக உள்ள **ब्रह्मविद्यां** ப்3ரஹ்மவித்3யாம் ப்ரஹ்ம வித்யாவை **ज्येष्ठपुत्राय** ஜ்யேஷ்ட2புத்ராய (தன்னுடைய) மூத்த மகனான **अथर्वाय** அத2ர்வாய அதர்வனுக்கு **प्राह** ப்ராஹ உபதேசித்தார்.

ப்ரஹ்மா, தேவர்களுள் முதன்மையானவராகவும் முக்கிய மானவராகவும் தோன்றினார். அவர் உலகத்தைப் படைப்ப வராகவும் உலகத்தைக் காப்பவராகவும் இருக்கிறார். அவர் அனைத்து அறிவிற்கும் ஆதாரமாக உள்ள ப்ரஹ்ம வித்யாவைத் தன்னுடைய மூத்த மகனான அதர்வனுக்கு உபதேசித்தார்.

२. अथर्वणे यां प्रवदेत ब्रह्मा अथर्वा तां पुरोवाचाङ्गिरे ब्रह्मविद्याम्।
स भारद्वाजाय सत्यवहाय प्राह भारद्वाजोऽङ्गिरसे परावराम्॥

2. அத$_{2}$ர்வணே யாம் ப்ரவதே$_{3}$த ப்$_{3}$ரஹ்மா
அத$_{2}$ர்வா தாம் புரோவாசாங்கி$_{3}$ரே ப்$_{3}$ரஹ்மவித்$_{3}$யாம் ।
ஸ பா$_{4}$ரத்$_{3}$வாஜாய ஸத்யவஹாய ப்ராஹ
பா$_{4}$ரத்$_{3}$வாஜோऽங்கி$_{3}$ரஸே பராவராம் ॥

**ब्रह्मा** ப்$_{3}$ரஹ்மா ப்ரஹ்மா **यां ब्रह्मविद्यां** யாம் ப்$_{3}$ரஹ்மவித்$_{3}$யாம் எந்த ப்ரஹ்மவித்யாவை **अथर्वणे** அத$_{2}$ர்வணே அதர்வனுக்கு **पुरा** புரா முன்பு **प्रवदेत** ப்ரவதே$_{3}$த உபதேசித்தாரோ **तां** தாம் அதை **अथर्वा** அத$_{2}$ர்வா அதர்வன் **अङ्गिरे** அங்கி$_{3}$ரே அங்கிருக்கு **उवाच** உவாச உபதேசித்தார். **सः** ஸ: அவர் (அங்கிர்) **भारद्वाजाय** பா$_{4}$ரத்$_{3}$வாஜாய பரத்வாஜகுலத்தில் தோன்றிய **सत्यवहाय** ஸத்யவஹாய ஸத்யவஹருக்கு **प्राह** ப்ராஹ உபதேசித்தார். **परावरां** பராவராம் பரம்பரையாக வந்த (இந்த வித்யாவை) **भारद्वाजः** பா$_{4}$ரத்$_{3}$வாஜ: பாரத்வாஜர் **अङ्गिरसे** அங்கி$_{3}$ரஸே அங்கிரஸுக்கு (உபதேசித்தார்).

ப்ரஹ்மா எந்த ப்ரஹ்மவித்யாவை அதர்வனுக்கு முன்பு உபதேசித்தாரோ, அதை அதர்வன் அங்கிருக்கு உபதேசித்தார். அங்கிர், பரத்வாஜ குலத்தில் தோன்றிய ஸத்யவஹருக்கு உபதேசித்தார். பரம்பரையாக வந்த இந்த வித்யாவை பாரத்வாஜர், அங்கிரஸுக்கு உபதேசித்தார்.

**३. शौनको ह वै महाशालः अङ्गिरसं विधिवदुपसन्नः पप्रच्छ।**
**कस्मिन्नु भगवो विज्ञाते सर्वमिदं विज्ञातं भवतीति॥**

3. சௌ$_{1}$னகோ ஹ வை மஹாசா$_{1}$ல:
அங்கி$_{3}$ரஸம் விதி$_{4}$வது$_{3}$பஸன்ன: பப்ரச்ச$_{2}$ ।
கஸ்மின்னு ப$_{4}$க$_{3}$வோ விஞாதே
ஸர்வமித$_{3}$ம் விஞாதம் ப$_{4}$வதீதி ॥

**महाशालः ह वै** மஹாசா$_{1}$ல: ஹ வை பெரிய யாகசாலையை உடைய **शौनकः** சௌ$_{1}$னக: சௌனகர் **अङ्गिरसं** அங்கி$_{3}$ரஸம் அங்கிரஸை

**विधिवत्** விதி₄வத் முறைப்படி **उपसन्नः** உபஸன்ன: அணுகி **भगवः** ப₄க₃வ: இறைவா **कस्मिन् नु** கஸ்மின் னு எதை **विज्ञाते** விஞாதே அறிவதனால் **इदं सर्वं** இத₃ம் ஸர்வம் இவை அனைத்தையும் **विज्ञातं** விஞாதம் அறிந்தது **भवति** ப₄வதி ஆகும் **इति** இதி என்று **पप्रच्छ** பப்ரச்ச₂ கேட்டார்.

பெரிய யாகசாலையை உடைய சௌனகர் அங்கிரஸை முறைப்படி அணுகி இறைவா, எதை அறிவதனால் இவை அனைத்தையும் அறிந்தது ஆகும்? என்று கேட்டார்.

இவ்வுபநிஷத்தில் குருவாக விளங்குபவர் அங்கிரஸ். சிஷ்யனாக விளங்குபவர் சௌனகர். சௌனகருக்கு பெரிய யாகசாலையை உடையவர் என்ற அடைமொழியானது, அவர் இல்லறவாஸியாக இருந்துகொண்டு, வேதநெறிப்படி வாழ்க்கையை மேற்கொண்டு தன்னைத் தகுதிப்படுத்தியவர் என்பதைக் குறிக்கிறது.

४. तस्मै स होवाच — द्वे विद्ये वेदितव्ये इति ह स्म
यद् ब्रह्मविदो वदन्ति परा चैवापरा च ॥

4. தஸ்மை ஸ ஹோவாச —த்₃வே வித்₃யே வேதி₃தவ்யே இதி ஹ
ஸ்ம யத்₃ ப்₃ரஹ்மவிதோ₃ வத₃ந்தி பரா சைவாபரா ச ॥

**सः** ஸ: அவர் (அங்கிரஸ்) **तस्मै** தஸ்மை அவரிடம் (சௌனகரிடம்) **ह उवाच** ஹ உவாச (இவ்விதம்) கூறினார். **द्वे** த்₃வே இரண்டு (விதமான) **विद्ये** வித்₃யே அறிவு **वेदितव्ये** வேதி₃தவ்யே அறியத்தக்கது **इति ह स्म** இதி ஹ ஸ்ம என்று **यद् ब्रह्मविदः** யத்₃ ப்₃ரஹ்மவித₃: வேதத்தை அறிந்தவர்கள் **वदन्ति** வத₃ந்தி கூறுகிறார்கள். **परा च एव** பரா ச ஏவ (அந்த இவ்விரண்டு அறிவானது) பரா (வித்யா என்றும்) **अपरा च** அபரா ச அபரா (வித்யா என்றும் பெயர் பெற்றுள்ளது).

அங்கிரஸ் சௌனகரிடம் இவ்விதம் கூறினார்: இரண்டு விதமான அறிவு அறியத்தக்கது என்று வேதத்தை அறிந்தவர்கள்

கூறுகிறார்கள். அந்த இவ்விரண்டு அறிவானது, பரா வித்யா என்றும் அபரா வித்யா என்றும் பெயர்பெற்றுள்ளது.

५. तत्रापरा ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेदः
शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति।
अथ परा यया तदक्षरमधिगम्यते॥

5. தத்ராபரா ரிக்$_3$வேதோ$_3$ யஜுர்வேத$_3$:
ஸாமவேதோ$_3$ऽத$_2$ர்வவேத$_3$:
சி$_1$க்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம்
ச$_2$ந்தோ$_3$ ஜ்யோதிஷமிதி ।
அத$_2$ பரா யயா தத$_3$க்ஷரமதி$_4$க$_3$ம்யதே ॥

**तत्र** தத்ர அதில் (அந்த இரண்டில்) **ऋग्वेदः** ரிக்$_3$வேத$_3$: ரிக்வேதம் **यजुर्वेदः** யஜுர்வேத$_3$: யஜுர்வேதம் **सामवेदः** ஸாமவேத$_3$: ஸாமவேதம் **अथर्ववेदः** அத$_2$ர்வவேத$_3$: அதர்வண வேதம் **शिक्षा** சி$_1$க்ஷா உச்சாரண சாஸ்த்ரம் **कल्पः** கல்ப: யாகவிதியைப்பற்றிய சாஸ்த்ரம் **व्याकरणं** வ்யாகரணம் இலக்கணம் **निरुक्तं** நிருக்தம் சொல் ன் தோற்றத்தை ஆராயும் சாஸ்த்ரம் **छन्दः** ச$_2$ந்த$_3$: செய்யுள் **ज्योतिषं** ஜ்யோதிஷம் ஜ்யோதிடம் (என்பவை) **अपरा इति** அபரா இதி அபரா (வித்யா). **अथ** அத$_2$ ஆனால் **यया** யயா எதனால் **तत्** தத் அந்த **अक्षरं** அக்ஷரம் அழிவற்ற (பரம்பொருள்) **अधिगम्यते** அதி$_4$க$_3$ம்யதே அடையப் படுகிறதோ **परा** பரா (அதுவே) பரா (வித்யா).

அந்த இரண்டில், ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம், உச்சாரண சாஸ்த்ரம், யாகவிதியைப் பற்றிய சாஸ்த்ரம், இலக்கணம், சொல் ன் தோற்றத்தை ஆராயும் சாஸ்த்ரம், செய்யுள், ஜ்யோதிடம் என்பவை அபரா வித்யா. ஆனால், எதனால் அந்த அழிவற்ற பரம்பொருள் அடையப் படுகிறதோ அதுவே பரா வித்யா.

६. यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रमवर्णम्
अचक्षुःश्रोत्रं तदपाणिपादम्।
नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं तदव्ययं
यद् भूतयोनिं परिपश्यन्ति धीराः॥

6. யத்தத$_3$த்$_3$ரேச்$_1$யமக்$_3$ராஹ்யமகோ$_3$த்ரமவர்ணம்
அசக்ஷு:ச்$_1$ரோத்ரம் தத$_3$பாணிபாத$_3$ம் ।
நித்யம் விபு$_4$ம் ஸர்வக$_3$தம் ஸுஸூக்ஷ்மம் தத$_3$வ்யயம்
யத்$_3$ பூ$_4$தயோனிம் பரிபச்$_1$யந்தி தீ$_4$ரா: ॥

**यत् तत्** யத் தத் எந்த அது (ப்ரஹ்மன்) **अद्रेश्यं** அத்$_3$ரேச்$_1$யம் (ஞானேந்த்ரியங்களால்) பார்க்கப்படாதது **अग्राह्यं** அக்$_3$ராஹ்யம் (கர்மேந்த்ரியங்களால்) க்ரஹிக்கப்படாதது **अगोत्रं** அகோ$_3$த்ரம் காரணமற்றது **अवर्णं** அவர்ணம் குணமற்றது **अचक्षुःश्रोत्रं** அசக்ஷு: ச்$_1$ரோத்ரம் கண்களும் செவிகளும் அற்றது **तत्** தத் அது **अपाणिपादं** அபாணிபாத$_3$ம் கைகளும் கால்களும் அற்றது **नित्यं** நித்யம் எப்பொழுதும் உள்ளது **विभुं** விபு$_4$ம் அனைத்துமாகத் தோற்றமளிப்பது **सर्वगतं** ஸர்வக$_3$தம் அனைத்தையும் வ்யாபிப்பது **सुसूक्ष्मं** ஸுஸூக்ஷ்மம் மிகவும் ஸூக்ஷ்மமானது **तत्** தத் அது **अव्ययं** அவ்யயம் அழிவற்றது **भूतयोनिं** பூ$_4$தயோனிம் உலகத்திற்கு உபாதான காரணமாக உள்ளது. **यत्** யத் இப்படிப்பட்ட (ப்ரஹ்மனை) **धीराः** தீ$_4$ரா: தீரர்கள் **परिपश्यन्ति** பரிபச்$_1$யந்தி எங்கும் காண்கின்றனர்.

அந்த ப்ரஹ்மன், ஞானேந்த்ரியங்களால் பார்க்கப்படாதது, கர்மேந்த்ரியங்களால் க்ரஹிக்கப்படாதது, காரணமற்றது, குணமற்றது, கண்களும் செவிகளும் அற்றது, அது கைகளும் கால்களும் அற்றது, எப்பொழுதும் உள்ளது, அனைத்துமாகத் தோற்றமளிப்பது, அனைத்தையும் வ்யாபிப்பது, மிகவும் ஸூக்ஷ்மமானது, அது அழிவற்றது, உலகத்திற்கு உபாதான காரணமாக உள்ளது. இப்படிப்பட்ட ப்ரஹ்மனை தீரர்கள் எங்கும் காண்கின்றனர்.

७. यथोर्णनाभिः सृजते गृह्णते च यथा पृथिव्यामोषधयः सम्भवन्ति।
यथा सतः पुरुषात्केशलोमानि तथाक्षरात्सम्भवतीह विश्वम्।।

7. யதோ$_2$ர்ணநாபி$_4$: ஸ்ருஜதே க்$_3$ருஹ்ணதே ச
யதா$_2$ ப்ருதி$_2$வ்யாமோஷத$_4$ய: ஸம்ப$_4$வந்தி।
யதா$_2$ ஸத: புருஷாத்கேச$_1$லோமானி
ததா$_2$க்ஷராத்ஸம்ப$_4$வதீஹ விச்$_1$வம் ।।

**यथा** யதா$_2$ எவ்விதம் **ऊर्णनाभिः** ஊர்ணநாபி$_4$: சிலந்தி **सृजते** ஸ்ருஜதே (வலையை) உற்பத்தி செய்கிறதோ **गृह्णते च** க்$_3$ருஹ்ணதே ச (தனக்குள்) எடுத்தும் கொள்கிறதோ **यथा** யதா$_2$ எவ்விதம் **ओषधयः** ஓஷத$_4$ய: மரங்கள் **पृथिव्यां** ப்ருதி$_2$வ்யாம் பூமியில் **सम्भवन्ति** ஸம்ப$_4$வந்தி தோன்றுகின்றனவோ **यथा** யதா$_2$ எவ்விதம் **सतः** ஸத: உயிருடன் இருக்கின்ற **पुरुषात्** புருஷாத் மனிதரிடமிருந்து **केश-लोमानि** கேச$_1$-லோமானி தலையிலும் உட லும் உள்ள முடிகள் (தோன்றுகின்றனவோ) **तथा** ததா$_2$ அவ்விதம் **अक्षरात्** அக்ஷராத் அழியாத (ப்ரஹ்மனிடமிருந்து) **इह** இஹ இங்கு **विश्वं** விச்$_1$வம் உலகம் **सम्भवति** ஸம்ப$_4$வதி தோன்றுகிறது.

எவ்விதம் சிலந்தி வலையை உற்பத்தி செய்கிறதோ, தனக்குள் எடுத்தும் கொள்கிறதோ, எவ்விதம் மரங்கள் பூமியில் தோன்றுகின்றனவோ, எவ்விதம் உயிருடன் இருக்கின்ற மனிதரிடமிருந்து தலையிலும் உட லும் உள்ள முடிகள் தோன்றுகின்றனவோ, அவ்விதம் அழியாத ப்ரஹ்மனிடமிருந்து இங்கு உலகம் தோன்றுகிறது.

८. तपसा चीयते ब्रह्म ततोऽन्नमभिजायते।
अन्नात्प्राणो मनः सत्यं लोकाः कर्मसु चामृतम्।।

8. தபஸா சீயதே ப்$_3$ரஹ்ம ததோऽன்னமபி$_4$ஜாயதே।
அன்னாத்ப்ராணோ மன: ஸத்யம் லோகா: கர்மஸு சாம்ருதம் ।।

**ब्रह्म** ப்₃ரஹ்ம ப்ரஹ்மன் **तपसा** தபஸா அறிவால் **चीयते** சீயதே (ஸ்ருஷ்டிக்குத்) தயாராகிறது. **ततः** தத: அதனிடமிருந்து (ஸ்ருஷ்டிக்குத் தயாராக இருக்கின்ற ப்ரஹ்மனிடமிருந்து) **अन्नं** அன்னம் படைக்கும் சக்தி **अभिजायते** அபி₄ஜாயதே உருவாகிறது. **अन्नात्** அன்னாத் படைக்கும் சக்தியி ருந்து **प्राणः** ப்ராண: ஸூக்ஷ்ம ப்ரபஞ்சம் (தோன்றுகிறது). (பிறகு) **मनः** மன: ஸமஷ்டி மனமும் **सत्यं** ஸத்யம் ஸ்தூல பூதங்களும் **लोकाः** லோகா: உலகங்களும் (செயல்களும் தோன்றுகின்றன). **कर्मसु** கர்மஸு செயல்களி ருந்து **अमृतं च** அம்ருதம் ச கர்மபலன்களும் (தோன்றுகின்றன).

ப்ரஹ்மன் அறிவால் ஸ்ருஷ்டிக்குத் தயாராகிறது. ஸ்ருஷ்டிக்குத் தயாராக இருக்கின்ற ப்ரஹ்மனிடமிருந்து படைக்கும் சக்தி உருவாகிறது. படைக்கும் சக்தியி ருந்து ஸூக்ஷ்ம ப்ரபஞ்சம் தோன்றுகிறது. பிறகு ஸமஷ்டி மனமும் ஸ்தூல பூதங்களும் உலகங்களும் செயல்களும் தோன்றுகின்றன. செயல்களி ருந்து கர்மபலன்களும் தோன்றுகின்றன.

படைப்பானது படிப்படியாக வந்துள்ளது என்பதே இம்மந்த்ரத்தின் மையக்கருத்து. முத ல் ப்ரஹ்மன் ஸ்ருஷ்டிக்குத் தயாராகிறது. படைக்கலாம் என்ற அறிவே ப்ரஹ்மனின் தவம்.

९. यः सर्वज्ञः सर्वविद् यस्य ज्ञानमयं तपः।
तस्मादेतद् ब्रह्म नाम रूपमन्नं च जायते॥

9. ய: ஸர்வஞ: ஸர்வவித்₃ யஸ்ய ஞானமயம் தப: ।
தஸ்மாதே₃தத்₃ ப்₃ரஹ்ம நாம ரூபமன்னம் ச ஜாயதே ॥

**यः** ய: எவர் **सर्वज्ञः** ஸர்வஞ: அனைத்தையும் ஸாமான்யமாக அறிகிறாரோ **सर्वविद्** ஸர்வவித்₃ அனைத்தையும் விசேஷமாக அறிகிறாரோ **यस्य** யஸ்ய எவருக்கு **ज्ञानमयं** ஞானமயம் (உலகைப் படைக்கும்) அறிவே **तपः** தப: தவமாகிறதோ **तस्मात्** தஸ்மாத் அவரிடமிருந்து (ப்ரஹ்மனிடமிருந்து) **एतत्** ஏதத் இந்த **ब्रह्म** ப்₃ரஹ்ம

ஹிரண்யகர்பரும் **नाम** நாம பெயரும் **रूपं** ரூபம் உருவமும் **अन्नं च** அன்னம் ச உணவும் **जायते** ஜாயதே தோன்றுகின்றன.

எவர் அனைத்தையும் ஸாமான்யமாக அறிகிறாரோ, அனைத்தையும் விசேஷமாக அறிகிறாரோ, எவருக்கு உலகைப்படைக்கும் அறிவே தவமாகிறதோ, அந்த ப்ரஹ்ம னிடமிருந்து இந்த ஹிரண்யகர்பரும் பெயரும் உருவமும் உணவும் தோன்றுகின்றன.

## इति प्रथममुण्डके प्रथमः खण्डः

முதல் முண்டகத்தில் முதல் கண்டம் முடிவுற்றது.

## प्रथममुण्डके द्वितीयः खण्डः

முதல் முண்டகத்தில் இரண்டாவது கண்டம்

१. तदेतत्सत्यं मन्त्रेषु कर्माणि कवयः
यान्यपश्यंस्तानि त्रेतायां बहुधा सन्ततानि।
तान्याचरथ नियतं सत्यकामाः
एष वः पन्थाः सुकृतस्य लोके॥

1. ததே$_3$தத்ஸத்யம் மந்த்ரேஷு கர்மாணி கவய:
யாந்யபச்$_1$யம்ஸ்தானி த்ரேதாயாம் ப$_3$ஹுதா$_4$ ஸந்ததானி ।
தாந்யாசரத$_2$ நியதம் ஸத்யகாமா:
ஏஷ வ: பந்தா$_2$: ஸுக்ருதஸ்ய லோகே ॥

**तत् एतत्** தத் ஏதத் இது (இங்கு சொல்லப்படுவது) **सत्यं** ஸத்யம் (முற்றிலும்) உண்மை. **कवयः** கவய: ரிஷிகள் **यानि** யானி எந்த **कर्माणि** கர்மாணி யாகங்களை **मन्त्रेषु** மந்த்ரேஷு மந்த்ரங்களுக்குள் **अपश्यन्** அபச்$_1$யன் பார்த்தார்களோ **तानि** தானி அவை **त्रेतायां** த்ரேதாயாம் மூன்று (வேதங்களில்) **बहुधा** ப$_3$ஹுதா$_4$ பலவிதமாக **सन्ततानि** ஸந்ததானி விரிந்து அமைந்துள்ளன. **सत्यकामाः** ஸத்ய காமா: கர்மபலத்தில் விருப்பம் உடையவர்களே **तानि** தானி அவைகளை (அந்தக் கர்மங்களை) **नियतं** நியதம் முறையாக **आचरथ** ஆசரத$_2$ அனுஷ்டானம் செய்வீர்களாக. **सुकृतस्य** ஸுக்ருதஸ்ய (உங்களால் செய்யப்பட்ட) கர்மத்தின் **लोके** லோகே பலனை அடைவதற்கு **वः** வ: உங்களுக்கு **एषः** ஏஷ: இதுவே **पन्थाः** பந்தா$_2$: மார்கமாக (உள்ளது).

இங்கு சொல்லப்படுவது முற்றிலும் உண்மை. ரிஷிகள் எந்த யாகங்களை மந்த்ரங்களுக்குள் பார்த்தார்களோ, அவை மூன்று வேதங்களில் பலவிதமாக விரிந்து அமைந்துள்ளன. கர்மபலத்தில் விருப்பம் உடையவர்களே, அந்தக் கர்மங்களை முறையாக அனுஷ்டானம் செய்வீர்களாக. உங்களால்

செய்யப்பட்ட கர்மத்தின் பலனை அடைவதற்கு உங்களுக்கு இதுவே மார்கமாக உள்ளது.

**२. यदा लेलायते ह्यर्चिः समिद्धे हव्यवाहने।**
**तदाज्यभागावन्तरेण आहुतीः प्रतिपादयेत्॥**

2. யதா$_3$ லேலாயதே ஹ்யர்சி: ஸமித்$_3$தே$_4$ ஹவ்யவாஹனே ।
தஹா$_3$ஜ்யபா$_4$கா$_3$வந்தரேண ஆஹுதீ: ப்ரதிபாத$_3$யேத் ॥

**यदा** யதா$_3$ எப்பொழுது **समिद्धे** ஸமித்$_3$தே$_4$ நன்கு தூண்டிவிடப்பட்ட **हव्यवाहने** ஹவ்யவாஹனே நெருப்பில் **अर्चिः हि** அர்சி: ஹி சுடரானது **लेलायते** லேலாயதே மேல்நோக்கியுள்ளதோ **तदा** ததா$_3$ அப்பொழுது **आज्यभागौ** ஆஜ்யபா$_4$கௌ$_3$ வடக்குப்பகுதிக்கும் தெற்குப்பகுதிக்கும் **अन्तरेण** அந்தரேண இடையில் **आहुतीः** ஆஹுதீ: யாகத்திற்கான பொருள்களை **प्रतिपादयेत्** ப்ரதிபாத$_3$யேத் அர்ப்பணம் செய்ய வேண்டும்.

எப்பொழுது நன்கு தூண்டிவிடப்பட்ட நெருப்பில் சுடரானது மேல்நோக்கியுள்ளதோ, அப்பொழுது வடக்குப்பகுதிக்கும் தெற்குப்பகுதிக்கும் இடையில் யாகத்திற்கான பொருள்களை அர்ப்பணம் செய்யவேண்டும்.

**३. यस्याग्निहोत्रमदर्शमपौर्णमासम्**
**अचातुर्मास्यमनाग्रयणमतिथिवर्जितं च।**
**अहुतमवैश्वदेवमविधिना हुतम्**
**आसप्तमांस्तस्य लोकान्हिनस्ति॥**

3. யஸ்யாக்$_3$னிஹோத்ரமத$_3$ர்ச$_1$மபௌர்ணமாஸம்
அசாதுர்மாஸ்யமனாக்$_3$ரயணமதிதி$_2$வர்ஜிதம் ச ।
அஹுதமவைச்$_1$வதே$_3$வமவிதி$_4$னா ஹுதம்
ஆஸப்தமாம்ஸ்தஸ்ய லோகான்ஹினஸ்தி ॥

**यस्य** யஸ்ய எவருடைய **अग्निहोत्रं** அக்₃னிஹோத்ரம் அக்னி ஹோத்ரமானது **अदर्श** அத₃ர்ச₁ம் தர்சம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अपौर्णमासं** அபௌர்ணமாஸம் பௌர்ணமாஸம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अचातुर्मास्यं** அசாதுர்மாஸ்யம் சாதுர்மாஸ்யம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अनाग्रयणं** அனாக்₃ரயணம் ஆக்ரயணம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अतिथिवर्जितं च** அதிதி₂வர்ஜிதம் ச விருந் தோம்பல் அற்றதாகவும் **अहुतं** அஹுதம் முறையான காலத்தில் செய்யப்படாததாகவும் **अवैश्वदेवं** அவைச்₁வதே₃வம் வைச்வதேவம் (என்ற யாகம்) அற்றதாகவும் **अविधिना हुतं** அவிதி₄னா ஹுதம் முறைப்படி செய்யப்படாததாகவும் (அமைகிறதோ) **तस्य** தஸ்ய அவருக்கு **आसप्तमान् लोकान्** ஆஸப்தமான் லோகான் ஏழு உலகங்கள் வரை (செல்ல உதவும் புண்யங்கள்) **हिनस्ति** ஹினஸ்தி அழிகின்றன.

எவருடைய அக்னிஹோத்ரமானது தர்சம் என்ற யாகம் அற்றதாகவும் பௌர்ணமாஸம் என்ற யாகம் அற்றதாகவும் சாதுர்மாஸ்யம் என்ற யாகம் அற்றதாகவும் ஆக்ரயணம் என்ற யாகம் அற்றதாகவும் விருந்தோம்பல் அற்றதாகவும் முறையான காலத்தில் செய்யப்படாததாகவும் வைச்வதேவம் என்ற யாகம் அற்றதாகவும் முறைப்படி செய்யப்படாததாகவும் அமைகிறதோ, அவருக்கு ஏழு உலகங்கள் வரை செல்ல உதவும் புண்யங்கள் அழிகின்றன.

அக்னிஹோத்ரமானது இங்கு குறிப்பிட்ட யாகங்களுடன் செய்யப் படவேண்டும். இங்கு குறிப்பிட்ட யாகங்களை செய்யவில்லை என்றால் அக்னி ஹோத்ரம் செய்வதால் மட்டும் பயன் இல்லை. காம்யமாக செய்யும் கர்மத்தை முறையாக செய்யவில்லை என்றால் விபரீத பலனும் ஏற்படுகிறது என்ற கருத்தும் இங்கு புகட்டப் படுகிறது.

**४. काली कराली च मनोजवा च सुलोहिता या च सुधूम्रवर्णा।**
**स्फुलिङ्गिनी विश्वरुची च देवी लेलायमाना इति सप्तजिह्वाः॥**

4. காலீ கராலீ ச மனோஜவா ச
ஸுலோஹிதா யா ச ஸுதூ$_4$ம்ரவர்ணா ।
ஸ்பு$_2$ ங்கி$_3$னீ விச்$_1$வருசீ ச தே$_3$வீ
லேலாயமானா இதி ஸப்த ஜிஹ்வா: ॥

**काली** காலீ கருமையான சுடர் **कराली च** கராலீ ச மிக உஷ்ணமான சுடர் **मनोजवा च** மனோஜவா ச மனதைப்போல் வேகமாக அசையும் சுடர் **सुलोहिता** ஸுலோஹிதா அடர்ந்த சிவப்புச்சுடர் **या च सुधूम्रवर्णा** யா ச ஸுதூ$_4$ம்ரவர்ணா புகையின் வர்ணத்தையுடைய சுடர் **स्फुलिङ्गिनी** ஸ்பு$_2$ ங்கி$_3$னீ பளிச்சிடும் சுடர் **विश्वरुची च देवी** விச்$_1$வருசீ ச தே$_3$வீ பல வர்ணங்களுடன் கூடிய சுடர் **इति** இதி என்று **लेलायमाना:** லேலாயமானா: ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற (நெருப்பிற்கு) **सप्त-जिह्वा:** ஸப்த-ஜிஹ்வா: ஏழு நாக்குகள் (உள்ளன).

கருமையான சுடர், மிக உஷ்ணமான சுடர், மனதைப்போல் வேகமாக அசையும் சுடர், அடர்ந்த சிவப்புச் சுடர், புகையின் வர்ணத்தையுடைய சுடர், பளிச்சிடும் சுடர், பல வர்ணங்களுடன் கூடிய சுடர் என்று, ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற நெருப்பிற்கு ஏழு நாக்குகள் உள்ளன.

**५. एतेषु यश्चरते भ्राजमानेषु यथाकालं चाहुतयो ह्याददायन्।**
**तं नयन्त्येताः सूर्यस्य रश्मयः यत्र देवानां पतिरेकोऽधिवासः॥**

5. ஏதேஷு யச்$_1$சரதே ப்$_4$ராஜமானேஷு
யதா$_2$காலம் சாஹுதயோ ஹ்யாத$_3$தா$_3$யன் ।
தம் நயந்த்யேதா: ஸூர்யஸ்ய ரச்$_1$மய:
யத்ர தே$_3$வானாம் பதிரேகோऽதி$_4$வாஸ: ॥

**यः** ய: யார் **एतेषु भ्राजमानेषु** ஏதேஷு ப்$_4$ராஜமானேஷு இந்த ஒளிர்கின்ற சுடர்களில் **यथाकालं** யதா$_2$காலம் சரியான காலத்தில் **चरते** சரதே (யாகத்தை) செய்கிறானோ (அவனை) **आददायन् हि** ஆத$_3$தா$_3$யன் ஹி அழைத்துச்செல்கின்ற **एताः** ஏதா: இந்த **आहुतयः च**

ஆஹுதய: ச ஆஹுதிகள் **सूर्यस्य** ஸூர்யஸ்ய ஸூர்யனுடைய **रश्मय:** ரச்$_1$மய: ஒளிக்கதிர்களாக (மாறி) **यत्र** யத்ர எங்கு **अधिवास:** அதி$_4$வாஸ: ஆள்கின்ற **एक:** ஏக: ஒருவனான **देवानां** தே$_3$வானாம் தேவர்களின் **पति:** பதி: தலைவன் (உள்ளானோ அங்கு) **तं** தம் அந்த (யஜமானனை) **नयन्ति** நயந்தி அழைத்துச் செல்கின்றன.

யார் இந்த ஒளிர்கின்ற சுடர்களில், சரியான காலத்தில் யாகத்தை செய்கிறானோ, அவனை அழைத்துச் செல்கின்ற இந்த ஆஹுதிகள், ஸூர்யனுடைய ஒளிக்கதிர்களாக மாறி, எங்கு ஆள்கின்ற ஒருவனான தேவர்களின் தலைவன் உள்ளானோ அங்கு அந்த யஜமானனை அழைத்துச்செல்கின்றன.

६. एह्येहीति तमाहुतय: सुवर्चस:
सूर्यस्य रश्मिभिर्यजमानं वहन्ति।
प्रियां वाचमभिवदन्त्योऽर्चयन्त्य:
एष व: पुण्य: सुकृतो ब्रह्मलोक:॥

6. ஏஹ்யேஹீதி தமாஹுதய: ஸுவர்சஸ:
ஸூர்யஸ்ய ரச்$_1$மிபி$_4$ர்யஜமானம் வஹந்தி।
ப்ரியாம் வாசமபி$_4$வத$_3$ந்த்யோऽர்சயந்த்ய:
ஏஷ வ: புண்ய: ஸுக்ருதோ ப்$_3$ரஹ்மலோக: ॥

**सूर्यस्य** ஸூர்யஸ்ய ஸூர்யனுடைய **रश्मिभि:** ரச்$_1$மிபி$_4$: ஒளிக்கதிர் களாக உள்ள **सुवर्चस:** ஸுவர்சஸ: ஒளிபொருந்திய **आहुतय:** ஆஹுதய: ஆஹுதிகள் **एहि एहि** ஏஹி ஏஹி வாரும் வாரும் **इति** இதி என்றும் **व:** வ: உங்களுடைய **पुण्य:** புண்ய: நல்ல **सुकृत:** ஸுக்ருத: கர்மத்தினுடைய பலனானது **एष:** ஏஷ: இந்த **ब्रह्मलोक:** ப்$_3$ரஹ்மலோக: ப்ரஹ்மலோகம் (என்றும்) **प्रियां** ப்ரியாம் ப்ரியமான **वाचं** வாசம் சொற்களை **अभिवदन्त्य:** அபி$_4$வத$_3$ந்த்ய: கூறிக் கொண்டும் **अर्चयन्त्य:** அர்சயந்த்ய: வணங்கிக்கொண்டும் **तं** தம் அந்த **यजमानं** யஜமானம் யஜமானனை **वहन्ति** வஹந்தி அழைத்துச் செல்கின்றன.

ஸூர்யனுடைய ஒளிக்கதிர்களாக உள்ள ஒளி பொருந்திய ஆஹுதிகள் வாரும் வாரும் என்றும் உங்களுடைய நல்ல கர்மத்தினுடைய பலனானது இந்த ப்ரஹ்மலோகம் என்றும் ப்ரியமான சொற்களைக் கூறிக்கொண்டும் வணங்கிக் கொண்டும் அந்த யஜமானனை அழைத்துச் செல்கின்றன.

இங்கு ப்ரஹ்மலோகம் என்ற சொல் ஸ்வர்கலோகத்தைக் குறிக்கிறது. இதுவரை கர்மத்தால் அடையப்படும் பலன்கள் கூறப்பட்டது. இனி கர்மத்தையே பற்றியுள்ளவர்கள் அடையும் கீழ்மையைப் பற்றியும் கர்மபலத்தின் நிலையாமை பற்றியும் பேசப்படுகிறது.

**७. प्लवा ह्येते अदृढा यज्ञरूपाः अष्टादशोक्तमवरं येषु कर्म।
एतच्छ्रेयो येऽभिनन्दन्ति मूढाः जरामृत्युं ते पुनरेवापि यन्ति।।**

7. ப்லவா ஹ்யேதே அத்$_3$ருடா$_4$ யஞரூபா:
அஷ்டாத$_3$சோ$_1$க்தமவரம் யேஷு கர்ம ।
ஏதச்ச்$_2$ரேயோ யேऽபி$_4$னந்த$_3$ந்தி மூடா$_4$:
ஜராம்ருத்யும் தே புனரேவாபி யந்தி ।।

**येषु** ஏஷு எந்த (யஞ ஸாதனங்களை) **अवरं** அவரம் அல்பமான (பலன்தரும்) **कर्म** கர்ம கர்மம் (சார்ந்துள்ளதாக) **उक्तं** உக்தம் (சாஸ்த்ரத்தினால்) கூறப்பட்டுள்ளதோ **एते** ஏதே அந்த **अष्टादश** அஷ்டாத$_3$ச$_1$ பதினெட்டு **यज्ञरूपाः** யஞரூபா: யஞத்திற்கான ஸாதனங்கள் **अदृढाः** அத்$_3$ருடா$_4$: உறுதியற்ற **प्लवाः** **हि** ப்லவா: ஹி படகுகள் (போன்றதாகின்றன). **ये** **मूढाः** யே மூடா$_4$: எந்த மூடர்கள் **एतत्** ஏதத் இதை (கர்மத்தை) **श्रेयः** ச்$_1$ரேய: மோக்ஷ ஸாதனமாக **अभिनन्दन्ति** அபி$_4$னந்த$_3$ந்தி கருதுகிறார்களோ **ते** தே அவர்கள் **पुनः** **एव** புன: ஏவ மீண்டும் மீண்டும் **जरामृत्युं** ஜராம்ருத்யும் வயோதி கத்தையும் மரணத்தையும் **अपियन्ति** அபியந்தி அடைகிறார்கள்.

எந்த யஞஸாதனங்களை அல்பமான பலன் தரும் கர்மம் சார்ந்துள்ளதாக சாஸ்த்ரத்தினால் கூறப்பட்டுள்ளதோ, அந்தப் பதினெட்டு யஞத்திற்கான ஸாதனங்கள் உறுதியற்ற படகுகள்

போன்றதாகின்றன. எந்த மூடர்கள் இந்தக் கர்மத்தை மோக்ஷ ஸாதனமாகக் கருதுகிறார்களோ, அவர்கள் மீண்டும் மீண்டும் வயோதிகத்தையும் மரணத்தையும் அடைகிறார்கள்.

பதினெட்டு யஞத்திற்கான ஸாதனங்கள் என்பது யாகங்களை செய்ய உதவும் பதினாறு ரித்விக்குகள், யஜமானன், யஜமானனின் மனைவி. இந்த நிலையற்ற மனிதர்களை சார்ந்து இருக்கும் யாகமும் நிலையற்ற பலனைத் தான் கொடுக்கும் என்பது கருத்து.

**௮. अविद्यायामन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितं मन्यमानाः।**
**जङ्घन्यमानाः परियन्ति मूढाः अन्धेनैव नीयमाना यथान्धाः॥**

8. அவித்$_3$யாயாமந்தரே வர்தமானா:
ஸ்வயம் தீ$_4$ரா: பண்டி$_3$தம் மன்யமானா: ।
ஜங்க$_4$ன்யமானா: பரியந்தி மூடா$_4$:
அந்தே$_4$னைவ நீயமானா யதா$_2$ந்தா$_4$: ॥

**अविद्यायां अन्तरे** அவித்$_3$யாயாம் அந்தரே அறியாமையின் மையத்தில் **वर्तमानाः** வர்தமானா: (மூழ்கி) இருப்பவர்கள் **स्वयं** ஸ்வயம் தங்களை **धीराः** தீ$_4$ரா: அறிவுடையவர்களாகவும் **पण्डितं मन्यमानाः** பண்டி$_3$தம் மன்யமானா: ஞானிகளாகவும் கருதுகின்ற **मूढाः** மூடா$_4$: அறிவி கள் **अन्धेन एव** அந்தே$_4$ன ஏவ குருடனாலேயே **नीयमानाः** நீயமானா: வழிநடத்தப்படுகின்ற **अन्धाः यथा** அந்தா$_4$: யதா$_2$ குருடர்கள் போல **जङ्घन्यमानाः** ஜங்க$_4$ன்யமானா: தொடர்ந்து துயரத்தால் தாக்கப் பட்டவர்களாக **परियन्ति** பரியந்தி அலைகிறார்கள்.

அறியாமையின் மையத்தில் மூழ்கி இருப்பவர்கள், தங்களை அறிவுடையவர்களாகவும் ஞானிகளாகவும் கருதுகின்ற அறிவி கள், குருடனாலேயே வழிநடத்தப்படுகின்ற குருடர்கள் போலத் தொடர்ந்து துயரத்தால் தாக்கப்பட்டவர்களாக அலைகிறார்கள்.

९. अविद्यायां बहुधा वर्तमानाः वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः।
यत्कर्मिणो न प्रवेदयन्ति रागात् तेनातुराः क्षीणलोकाश्च्यवन्ते॥

9. அவித்$_3$யாயாம் ப$_3$ஹுதா$_4$ வர்தமானா:
வயம் க்ருதார்தா$_2$ இத்யபி$_4$மந்யந்தி பா$_3$லா: ।
யத்கர்மிணோ ந ப்ரவேத$_3$யந்தி ராகா$_3$த்
தேனாதுரா: க்ஷீணலோகாச்$_1$ச்யவந்தே ॥

**अविद्यायां** அவித்$_3$யாயாம் அறியாமையில் **बहुधा** ப$_3$ஹுதா$_4$ வித விதமாக **वर्तमानाः** வர்தமானா: (மூழ்கி) இருப்பவர்களும் **बालाः** பா$_3$லா: பக்குவம் அடையாதவர்களும் **वयं** வயம் நாங்கள் **कृत-अर्थाः** க்ருத-அர்தா$_2$: அடையவேண்டியதை அடைந்துள்ளோம் **इति** இதி என்று **अभिमन्यन्ति** அபி$_4$மந்யந்தி கருதுகிறார்கள். **कर्मिणः** கர்மிண: கர்மத்தைப் பற்றியுள்ளோர் **रागात्** ராகா$_3$த் அவாவின் நிமித்தமாக (மோக்ஷத்தின் மஹிமையை) **यत्** யத் எதனால் **न प्रवेदयन्ति** ந ப்ரவேத$_3$யந்தி அறிவதில்லையோ **तेन** தேன அதனால் **आतुराः** ஆதுரா: துயரப்பட்டவர்களாகவும் **क्षीणलोकाः** க்ஷீணலோகா: கர்ம பலத்தை இழந்தவர்களாகவும் **च्यवन्ते** ச்யவந்தே வீழ்கிறார்கள்.

அறியாமையில் விதவிதமாக மூழ்கி இருப்பவர்களும் பக்குவம் அடையாதவர்களும் நாங்கள் அடையவேண்டியதை அடைந்துள்ளோம் என்று கருதுகிறார்கள். கர்மத்தைப் பற்றி யுள்ளோர், அவாவின் நிமித்தமாக மோக்ஷத்தின் மஹிமையை எதனால் அறிவதில்லையோ, அதனால் துயரப்பட்ட வர்களாகவும் கர்மபலத்தை இழந்தவர்களாகவும் வீழ்கிறார்கள்.

१०. इष्टापूर्तं मन्यमाना वरिष्ठं नान्यच्छ्रेयो वेदयन्ते प्रमूढाः।
नाकस्य पृष्ठे ते सुकृतेऽनुभूत्वा इमं लोकं हीनतरं वा विशन्ति॥

10. இஷ்டாபூர்தம் மன்யமானா வரிஷ்ட2ம்
நான்யச்ச்2ரேயோ வேத3யந்தே ப்ரமூடா4: ।
நாகஸ்ய ப்ருஷ்டே2 தே ஸுக்ருதேऽனுபூ4த்வா
இமம் லோகம் ஹீனதரம் வா விச1ந்தி ॥

**इष्टा-पूर्तं** இஷ்டா-பூர்தம் யாகத்தையும் ஸேவையையும் **वरिष्ठं** வரிஷ்ட2ம் மேலானதாக **मन्यमानाः** மன்யமானா: நினைப்பவர்களான **प्रमूढाः** ப்ரமூடா4: அறிவிலிகள் **अन्यत्** அன்யத் (இவற்றுக்கு) வேறான **श्रेयः** ச்1ரேய: மேலானதை **न वेदयन्ते** ந வேத3யந்தே அறியமாட்டார்கள். **ते** தே அவர்கள் **सुकृते** ஸுக்ருதே புண்யத்தால் அடையப்படும் **पृष्ठे** ப்ருஷ்டே2 உயர்மட்ட **नाकस्य** நாகஸ்ய ஸ்வர்கத்தில் **अनुभूत्वा** அனுபூ4த்வா (கர்மபலத்தை) அனுபவித்து **इमं** இமம் இந்த **लोकं** லோகம் உலகத்தை **वा** வா அல்லது **हीनतरं** ஹீனதரம் கீழான (உலகத்தை) **विशन्ति** விச1ந்தி அடைகிறார்கள்.

யாகத்தையும் ஸேவையையும் மேலானதாக நினைப்பவர் களான அறிவிலிகள், இவற்றுக்கு வேறான மேலானதை அறியமாட்டார்கள். அவர்கள் புண்யத்தால் அடையப்படும் உயர்மட்ட ஸ்வர்கத்தில் கர்மபலத்தை அனுபவித்து, இந்த உலகத்தை அல்லது கீழான உலகத்தை அடைகிறார்கள்.

யாகமும் ஸேவையும் மட்டுமே நேரடியாக மோக்ஷத்தைக் கொடுக்கும் என்ற கருத்தே நிராகரிக்கப்பட்டுள்ளது. யாகம், ஸேவை போன்றவை நம்மைப் பண்படுத்த முற்றிலும் அவசியம் என்ற கருத்து நிராகரிக்கப் படவில்லை என்பதை உணரவேண்டும்.

**११. तपःश्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये शान्ता विद्वांसो भैक्षचर्यां चरन्तः।**
**सूर्यद्वारेण ते विरजाः प्रयान्ति यत्रामृतः स पुरुषो ह्यव्ययात्मा॥**

11. தப:ச்1ரத்3தே4 யே ஹ்யுபவஸந்த்யரண்யே
சா1ந்தா வித்3வாம்ஸோ பை4க்ஷசர்யாம் சரந்த: ।
ஸூர்யத்3வாரேண தே விரஜா: ப்ரயாந்தி
யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா ॥

**ये विद्वांसः** யே வித்$_3$வாம்ஸ: எந்த உபாஸகர்கள் **शान्ताः** சா$_1$ந்தா: கட்டுப்பாட்டை அடைந்தவர்களாகவும் **भैक्षचर्यां चरन्तः** பை$_4$க்ஷசர்யாம் சரந்த: யாசித்தலை மேற்கொண்டவர்களாகவும் **अरण्ये** அரண்யே வனத்தில் **तपःश्रद्धे हि** தப:ச்$_1$ரத்$_3$தே$_4$ ஹி தவத்தையும் த்யானத்தையும் **उपवसन्ति** உபவஸந்தி அனுஷ்டிக்கிறார்களோ **ते** தே அவர்கள் **विरजाः** விரஜா: தூய்மையானவர்களாக **सूर्यद्वारेण** ஸூர்யத்$_3$வாரேண ஸூர்ய மார்கத்தில் **यत्र** யத்ர எங்கு **सः** ஸ: அந்த **अमृतः** அம்ருத: என்றுமுள்ள **अव्ययात्मा हि** அவ்யயாத்மா ஹி அழியாத **पुरुषः** புருஷ: ஹிரண்யகர்பர் (இருக்கிறாரோ அங்கு) **प्रयान्ति** ப்ரயாந்தி செல்கிறார்கள்.

எந்த உபாஸகர்கள், கட்டுப்பாட்டை அடைந்தவர்களாகவும் யாசித்தலை மேற்கொண்டவர்களாகவும் வனத்தில் தவத்தையும் த்யானத்தையும் அனுஷ்டிக்கிறார்களோ, அவர்கள் தூய்மை யானவர்களாக, ஸூர்யமார்கத்தில் எங்கு அந்த என்றுமுள்ள, அழியாத ஹிரண்யகர்பர் இருக்கிறாரோ அங்கு செல்கிறார்கள்.

**१२. परीक्ष्य लोकान्कर्मचितान्ब्राह्मणः**
**निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन।**
**तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्**
**समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम्॥**

12. பரீக்ஷ்ய லோகான்கர்மசிதான்ப்$_3$ராஹ்மண:
நிர்வேத$_3$மாயாந்நாஸ்த்யக்ருத: க்ருதேன ।
தத்$_3$விஞானார்த$_2$ம் ஸ கு$_3$ருமேவாபி$_4$க$_3$ச்சே$_2$த்
ஸமித்பாணி: ச்$_1$ரோத்ரியம் ப்$_3$ரஹ்மநிஷ்ட$_2$ம் ॥

**ब्राह्मणः** ப்$_3$ராஹ்மண: ஸத்வ குணத்தை அடைந்த ஸாதகன் **कर्मचितान्** கர்மசிதான் கர்மத்தாலும் (உபாஸனையாலும்) அடையப்பட்ட **लोकान्** லோகான் உலகங்களை **परीक्ष्य** பரீக்ஷ்ய ஆராய்ச்சி செய்து **निर्वेदं** நிர்வேத$_3$ம் வைராக்யத்தை **आयात्** ஆயாத் அடைகின்றான். **अकृतः** அக்ருத: (செய னால்) உருவாக்கப்படாத (ப்ரஹ்மன்) **कृतेन**

க்ருதேன செய னால் **न अस्ति** ந அஸ்தி அடையப்படாதது. **तत्** தத் ஆகவே **सः** ஸ: அவன் **समित्पाणिः** ஸமித்பாணி: ஸமித்தைக் கையில் ஏந்தியவனாக **विज्ञानार्थं** விஞானார்த$_2$ம் அறிவை அடைவதற்கு **श्रोत्रियं** ச்$_1$ரோத்ரியம் மரபுவழியில் வந்த **ब्रह्मनिष्ठं** ப்$_3$ரஹ்மநிஷ்ட$_2$ம் ப்ரஹ்மனில் நிலைபெற்ற **गुरुं** கு$_3$ரும் குருவை **अभिगच्छेत् एव** அபி$_4$க$_3$ச்சே$_2$த் ஏவ அடைந்துதான் ஆகவேண்டும்.

ஸத்வ குணத்தை அடைந்த ஸாதகன், கர்மத்தாலும் உபாஸனையாலும் அடையப்பட்ட உலகங்களை ஆராய்ச்சி செய்து வைராக்யத்தை அடைகின்றான். செய னால் உருவாக்கப்படாத ப்ரஹ்மன் செய னால் அடையப்படாதது. ஆகவே அவன் ஸமித்தைக் கையில் ஏந்தியவனாக, அறிவை அடைவதற்கு மரபு வழியில் வந்த, ப்ரஹ்மனில் நிலைபெற்ற குருவை அடைந்துதான் ஆகவேண்டும்.

१३. तस्मै स विद्वानुपसन्नाय सम्यक्
प्रशान्तचित्ताय शमान्विताय।
येनाक्षरं पुरुषं वेद सत्यं
प्रोवाच तां तत्त्वतो ब्रह्मविद्याम्॥

13. தஸ்மை ஸ வித்$_3$வானுபஸன்னாய ஸம்யக்
ப்ரசா$_1$ந்தசித்தாய ச$_1$மாந்விதாய ।
யேனாக்ஷரம் புருஷம் வேத$_3$ ஸத்யம்
ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்$_3$ரஹ்மவித்$_3$யாம் ॥

**सः विद्वान्** ஸ: வித்$_3$வான் அந்த ஞானியானவர் **सम्यक्** ஸம்யக் முறையாக **उपसन्नाय** உபஸன்னாய அணுகிய **शमान्विताय** ச$_1$மாந்விதாய இந்த்ரிய ஒழுக்கத்தையுடைய **प्रशान्तचित्ताय** ப்ரசா$_1$ந்த சித்தாய மனத்தூய்மையுடைய **तस्मै** தஸ்மை அவனுக்கு **येन** யேன எந்த (அறிவால்) **अक्षरं** அக்ஷரம் அழியாத **सत्यं** ஸத்யம் உண்மையான **पुरुषं** புருஷம் ப்ரஹ்மனை (குருவானவர்) **वेद** வேத$_3$

அறிவாரோ **तां** தாம் அந்த **ब्रह्मविद्यां** ப்₃ரஹ்மவித்₃யாம் ப்ரஹ்மனைப் பற்றிய அறிவை **तत्त्वतः** தத்த்வத: தெளிவாக **प्रोवाच** ப்ரோவாச உபதேசிக்கவேண்டும்.

அந்த ஞானியானவர், முறையாக அணுகிய, இந்த்ரிய ஒழுக்கத்தையுடைய, மனத்தூய்மையுடைய அவனுக்கு, எந்த அறிவால் அழியாத, உண்மையான, ப்ரஹ்மனை குருவானவர் அறிவாரோ, அந்த ப்ரஹ்மனைப் பற்றிய அறிவைத் தெளிவாக உபதேசிக்க வேண்டும்.

## इति प्रथममुण्डके द्वितीयः खण्डः

முதல் முண்டகத்தில் இரண்டாவது கண்டம் முடிவுற்றது.

## द्वितीयमुण्डके प्रथमः खण्डः

### இரண்டாவது முண்டகத்தில் முதல் கண்டம்

१. तदेतत्सत्यं यथा सुदीप्तात्पावकाद्
विस्फुलिङ्गाः सहस्रशः प्रभवन्ते सरूपाः ।
तथाक्षराद्विविधाः सोम्य भावाः
प्रजायन्ते तत्र चैवापि यन्ति ।।

1. ததே$_3$தத்ஸத்யம் யதா$_2$ ஸுதீ$_3$ப்தாத்பாவகாத்$_3$
விஸ்பு$_2$ ங்கா$_3$: ஸஹஸ்ரச$_1$: ப்ரப$_4$வந்தே ஸரூபா: ।
ததா$_2$க்ஷராத்$_3$விவிதா$_4$: ஸோம்ய பா$_4$வா:
ப்ரஜாயந்தே தத்ர சைவாபி யந்தி ।।

**तत् एतत्** தத் ஏதத் இது (இங்கு சொல்லப்படுவது) **सत्यं** ஸத்யம் (முற்றிலும்) உண்மை. **सोम्य** ஸோம்ய ப்ரியமானவனே **यथा** யதா$_2$ எவ்விதம் **सुदीप्तात्** ஸுதீ$_3$ப்தாத் ஒளிர்கின்ற **पावकात्** பாவகாத் நெருப்பினிடமிருந்து **सहस्रशः** ஸஹஸ்ரச$_1$: ஆயிரக்கணக்கான **सरूपाः** ஸரூபா: (நெருப்பின்) தன்மையான **विस्फुलिङ्गाः** விஸ்பு$_2$ ங்கா$_3$: பொறிகள் **प्रभवन्ते** ப்ரப$_4$வந்தே தோன்றுகின்றனவோ **तथा** ததா$_2$ அவ்விதம் **अक्षरात्** அக்ஷராத் அழியாத (ப்ரஹ்ம னிடமிருந்து) **विविधाः** விவிதா$_4$: பலவித **भावाः** பா$_4$வா: உயிரினங்கள் **प्रजायन्ते** ப்ரஜாயந்தே தோன்றுகின்றன. **तत्र एव च** தத்ர ஏவ ச அதனிடத்திலேயே **अपियन्ति** அபியந்தி (உயிரினங்கள்) ஒடுங்குகின்றன.

இங்கு சொல்லப்படுவது முற்றிலும் உண்மை. ப்ரியமானவனே, எவ்விதம் ஒளிர்கின்ற நெருப்பினிடமிருந்து ஆயிரக்கணக்கான நெருப்பின் தன்மையான பொறிகள் தோன்றுகின்றனவோ, அவ்விதம் அழியாத ப்ரஹ்மனிடமிருந்து பலவித உயிரினங்கள் தோன்றுகின்றன. அதனிடத்திலேயே உயிரினங்கள் ஒடுங்குகின்றன.

ப்ரஹ்மனிடமிருந்து ஜீவன் தோன்றினான் என்பதற்கு இங்கு கொடுக்கப்படும் உதாரணத்தி ருந்து, ப்ரஹ்மனும் ஜீவனும் உண்மையில் வேற்றுமை அற்ற ஸ்வரூபம் என்று விளங்குகிறது.

**२. दिव्यो ह्यमूर्तः पुरुषः सबाह्याभ्यन्तरो ह्यजः।**
**अप्राणो ह्यमनाः शुभ्रः ह्यक्षरात्परतः परः॥**

2. தி$_3$வ்யோ ஹ்யமூர்த: புருஷ: ஸபா$_3$ஹ்யாப்$_4$யந்தரோ ஹ்யஜ: ।
அப்ராணோ ஹ்யமனா: சு$_1$ப்$_4$ர: ஹ்யக்ஷராத்பரத: பர: ॥

**पुरुषः** புருஷ: (அந்த) ப்ரஹ்மன் **दिव्यः** தி$_3$வ்ய: ஸ்வயமாக ப்ரகாசிப்பது **अमूर्तः हि** அமூர்த: ஹி உருவமற்றது **सबाह्याभ्यन्तरः** ஸபா$_3$ஹ்யாப்$_4$யந்தர: உள்ளேயும் வெளியேயும் உள்ளது **अजः हि** அஜ: ஹி பிறப்பற்றது **अप्राणः** அப்ராண: ப்ராணனற்றது **अमनाः हि** அமனா: ஹி மனமற்றது **शुभ्रः** சு$_1$ப்$_4$ர: தூய்மையானது **परतः** பரத: மேலான **अक्षरात् हि** அக்ஷராத் ஹி மாயையைக்காட்டிலும் **परः** பர: மேலானது.

அந்த ப்ரஹ்மன் ஸ்வயமாக ப்ரகாசிப்பது, உருவமற்றது, உள்ளேயும் வெளியேயும் உள்ளது, பிறப்பற்றது, ப்ராணனற்றது, மனமற்றது, தூய்மையானது, மேலான மாயையைக் காட்டிலும் மேலானது.

**३. एतस्माज्ज्ञायते प्राणः मनः सर्वेन्द्रियाणि च।**
**खं वायुर्ज्योतिरापः पृथिवी विश्वस्य धारिणी॥**

3. ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண: மன: ஸர்வேந்த்$_3$ரியாணி ச ।
க$_2$ம் வாயுர்ஜ்யோதிராப: ப்ருதி$_2$வீ விச்$_1$வஸ்ய தா$_4$ரிணீ ॥

**एतस्मात्** ஏதஸ்மாத் இதனிடமிருந்து (இந்த ப்ரஹ்மனிடமிருந்து) **प्राणः** ப்ராண: ப்ராணன் **मनः** மன: மனம் **सर्वेन्द्रियाणि च** ஸர்வேந்த்$_3$ரியாணி ச அனைத்து இந்த்ரியங்கள் **खं** க$_2$ம் ஆகாசம் **वायुः** வாயு: காற்று **ज्योतिः** ஜ்யோதி: நெருப்பு **आपः** ஆப: நீர் **विश्वस्य** விச்$_1$வஸ்ய

அனைத்திற்கும் **धारिणी** தா$_4$ரிணீ ஆதாரமாக இருக்கும் **पृथिवी** ப்ருதி$_2$வீ பூமி **जायते** ஜாயதே (ஆகியவை) தோன்றுகின்றன.

